பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

04 10 2024 **FRIDAY** **6.30 PM**

## மாநில செய்திகள்
## தலைப்புச் செய்திகள்

- இயற்கை வேளாண்மை முறை ஆரோக்கியமான உணவை உறுதி செய்யும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.
- ரயில்வேத்துறை எந்த சூழ்நிலையிலும் தனியார் மயமாக்கப்பட மாட்டாது என்று அத்துறைக்கான அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.
- மழைகாலங்களில் தொற்றுநோய் பரவாமல் தடுப்பதற்காக சிறப்பு காய்ச்சல் முகாம்கள் நடத்தப்படும் என்று மாநில அரசு கூறியுள்ளது.
- மக்கள் நலனில் அக்கறையின்றி திமுக அரசு செயல்பட்டு வருவதாக பிஜேபி மீண்டும் குற்றம் சாட்டியுள்ளது.
- Ghana ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Diya Chaudhary இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

----- *இனி விரிவான செய்திகள்* ----

<<<<<<<<>>>>>>

அன்னையின் பெயரில் மரம் நடும் இயக்கத்தில் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கேட்டுக்கொண்டுள்ளார்.

இன்று ராஜஸ்தானில் பிரம்மகுமாரிகள் அமைப்பு சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சர்வதேச மாநாட்டில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

சுற்றுச்சூழல் மாசு மற்றும் பருவநிலை மாற்றத்தினால் ஏற்படும் பாதிப்புகளை தடுப்பதில் மரங்கள் முக்கிய பங்கு வகிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இயற்கை வேளாண்மைக்கு மத்திய அரசு ஊக்கம் அளித்து வருவதாகவும், இது ஆரோக்கியமான உணவை உறுதி செய்யும் என்றும் திருமதி திரௌபதி முர்மு கூறினார்.

<<<<<<<<>>>>>>

பாதுகாப்பு தளவாடங்களின் உற்பத்தி கடந்த நிதியாண்டில் ஒரு லட்சத்து 27 ஆயிரம் கோடி ரூபாயை தாண்டியதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் பாதுகாப்பு தளவாடங்கள் உற்பத்தியாளர் சங்கத்தின் வருடாந்திர பொதுகூட்டத்தில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

பாதுகாப்புத்துறையில் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதற்கு ஊக்கம் அளிக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

பாதுகாப்பு தளவாடங்கள் உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக திரு ராஜ்நாத் சிங் கூறினார்.

<<<<<<<<>>>>>>

ரயில்வேத்துறை எந்த சூழ்நிலையிலும் தனியார் மயமாக்கப்பட மாட்டாது என்று அத்துறைக்கான அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

ரயில்வே பாதுகாப்புப்படையின் நிறுவன தினத்தையொட்டி, இன்று நாசிக்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

ஏழை மற்றும் நடுத்தர மக்களின் பயணத்தில் ரயில்வே முக்கிய பங்கு வகிப்பதாக அவர் தெரிவித்தார்.

இதனைகருத்தில்கொண்டே ரயில்வேத்துறையின் வளர்ச்சிக்காக கூடுதல் முதலீடுகளை மத்திய அரசு செய்துவருவதாக அவர் கூறினார்.

பாதுகாப்பான ரயில் பயணத்திற்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டிருப்பதாகவும் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

<<<<<<<>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியா என்பது உலகிற்கே நன்மை பயக்கும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் பொருளாதார மாநாட்டில் உரையாற்றுகையில அவர் இவ்வாறு கூறினார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான பயணத்தில் ஏழை, மகளிர், இளையோர் மற்றும் விவசாயிகள் அதிக அளவில் பயனடைவார்கள் என்றும் அவர் கூறினார்.

மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக நிதி பற்றாக்குறை குறைந்து வருவதாகவும் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

தமிழகத்தில் விரைவில் 2 ஆயிரத்து 253 மருத்துவர்கள் நியமிக்கப்பட உள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா.சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

கோவை சிங்காநல்லூர் பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள நகர்ப்புற சமுதாய நல மையத்தினை இன்று திறந்துவைத்து அவர் பேசினார்.

மழைக்காலத்தில் தொற்றுநோய்கள் பரவாமல் இருப்பதற்கு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

வரும் 15-ஆம் தேதிக்கு பின்னர், காய்ச்சல் முகாம்கள் நடத்தப்படும் என்றும் திரு மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - மா. சுப்பிரமணியன் - 34 செகண்ட்ஸ்)*

<<<<<<<>>>>>>

தமிழகத்தில் அதிகரித்துவரும் டெங்கு, சிக்கன் குனியா போன்ற விஷக்காய்ச்சல்களை கட்டுப்படுத்த திமுக அரசு நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த காய்ச்சலினால் நாள்தோறும் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை ஐந்தாயிரத்தை கடந்துள்ளதாக ஊடகங்களில் வெளியான செய்திகளை சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனை கருத்தில்கொண்டு கொசு மருந்து அடிப்பது, காய்ச்சல் முகாமை நடத்துவது போன்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை திமுக அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு எடப்பாடி பழனிசாமி அந்த அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<<<>>>>>>

விமானப்படையின் 92-ஆவது ஆண்டு தினம் வரும் எட்டாம் தேதி கொண்டாடப்படுவதையொட்டி, சென்னையில் விமானப்படையின் சாகச நிகழ்ச்சி நாளை மறுநாள் நடைபெறவுள்ளது.

மெரினா கடற்கரையில் இந்த சாகச நிகழ்ச்சிக்கான முழு ஒத்திகை இன்று நடைபெற்றது.

இதனை ஏராளமானோர் பார்வையிட்டனர்.

<<<<<<<>>>>>>

மக்கள் நலனில் அக்கறையின்றி திமுக அரசு செயல்பட்டு வருவதாக பிஜேபி மாநில ஒருங்கிணைப்பாளர் திரு ஹெச் ராஜா குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று நெல்லையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்தில் திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர் போதைப்பொருட்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாக தெரிவித்தார்.

கள்ளச்சாராய உயிரிழப்புகளும் அதிகரித்துள்ளதாக அவர் குறை கூறினார்.

மத்தியில், திமுக அங்கம் வகித்த காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சிக்காலத்தில் வழங்கப்பட்ட நிதியைவிட தற்போது தமிழகத்திற்கு பிஜேபி தலைமையிலான மத்திய அரசு கூடுதல் நிதியை ஒதுக்கியுள்ளதாகவும் திரு ஹெச் ராஜா தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

தமிழகத்தில் திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர் பெறப்பட்ட முதலீடுகள் குறித்து முன்னுக்குப்பின் முரணான தகவல்களை மாநில அரசு வெளியிட்டு வருவதாக பாமக தலைவர் திரு அன்புமணி ராமதாஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த மூன்றாண்டுகளில் தொழில் முதலீட்டிற்காக 891 ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டுள்ளதாக மாநில அரசு குறிப்பிட்டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்மூலம், ஐந்து சதவீத முதலீடே செயல்பாட்டிற்கு வந்துள்ளதாகவும் திரு அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த ஐந்து தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் இதனை தெரிவித்த அவர், சில இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்றார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் - 51 செகண்ட்ஸ்)*

<<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

பெரம்பலூர் மாவட்டம் விளாமுத்தூர் கிராமத்தில் மருதை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள தடுப்பணை இன்று திறக்கப்பட்டது.

-----------

திருவள்ளூர் கோ-ஆப்-டெக்ஸ் விற்பனை நிலையத்தில் தீபாவளி சிறப்பு தள்ளுபடி விற்பனையை ஆட்சியர் திரு பிரபுசங்கர் இன்று தொடங்கிவைத்தார்.

--------------

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் இலவச சட்ட உதவி பெறுவது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

--------------

சுதந்திரப்போராட்ட வீரர் தியாகி சுப்பிரமணிய சிவாவின், 141-ஆவது பிறந்த தினத்தையொட்டி, தருமபுரி மாவட்டம் பாப்பாரப்பட்டியில் உள்ள மணிமண்டபத்தில் அன்னாரது சிலைக்கு ஆட்சியர் திருமதி சாந்தி மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

-------------

கன்னியாகுமரி மாவட்டம் கேசவன்புத்தூர்துறை மற்றும் பள்ளம்துறை ஊராட்சிகளுக்கு உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் வளர்ச்சித் திட்டப்பணிகளை ஆட்சியர் திருமதி அழகுமீனா இன்று ஆய்வு செய்தார்.

---------

மயிலாடுதுறை மாயூரநாதர் கோவில் வளாகத்தில், மகளிர் சுயஉதவிக்குழு உற்பத்திப்பொருட்களின் விற்பனை கண்காட்சியை ஆட்சியர் திரு மகாபாரதி இன்று தொடங்கிவைத்தார்.

----------

நாகை மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் இன்று நடைபெற்றது.

**<<<<<<<>>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

Ghana ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Diya Chaudhary இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், 6-4, 6-3 என்ற செட் கணக்கில் ஜிம்பாப்வே-யின் Sasha Natalie –ஐ வென்றார்.

--------------

ஷாங்காய் மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ரோஹன் போபண்ணா – குரேஷியாவின் Ivan Dodig இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 6-4, 6-3 என்ற செட் கணக்கில், ஸ்பெயினின் Pedro Martinez – Pablo Carreno Busta இணையை வென்றது.

--------------------

உலகக்கோப்பை மகளிர் டுவெண்டி - டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று நியூசிலாந்தை எதிர்கொள்கிறது.

துபாயில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

-------------

சீனாவில் நடைபெற்றுவரும் உலக ஜூனியர் கலப்பு குழு பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில், ஐந்து முதல் எட்டாவது இடத்திற்கான ஆட்டத்தில் இந்தியா, அமெரிக்காவை வென்றது.

--------------

பெருவின் லிமாவில் நடைபெற்றுவரும் உலக ஜூனியர் துப்பாக்கிச்சுடும் சாம்பியன் போட்டியில் இந்தியா இதுவரை 11 தங்கம், ஒரு வெள்ளி, நான்கு வெண்கலப்பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.

--------------

ஹாக்கி இந்தியா லீக் போட்டி டிசம்பர் மாதம் 28-ஆம் தேதி தொடங்கி, பிப்ரவரி மாதம் 5-ஆம் தேதி வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<<<<END>>>>>>**